**தலைப்பு 314 – தென் மாகாண சபை– 2023**

-----------------------------------------------------------

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பணிப்பொறுப்புக்கள்

### 1.1 தூரநோக்கு

மனித நேயமிக்க நிர்வாக முறையின் ஊடாக சுபீட்சமான தென் மாகாணம்

### 1.2 பணிக்கூற்று

தென் மாகாணத்தில் காணப்படும் மனித, நிதி மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்துவதன் ஊடாக மாகாணத்தினுள் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உயர் நிலைக்கு கொண்டு வருதலும் தேசிய பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பினை வழங்குதலும்.

### 1.3 பணிப்பொறுப்புக்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்

## 2. கணக்குகள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள்

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

தென் மாகாண சபைக்காக வழங்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு ரூபா 51,208 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 48,461 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

<u>**2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பான தகவல்கள்**</u>

| செலவின விடயம் | தேறிய நிதிஏற்பாடு | செலவினம் | கட்டுநிதி கிடைக்காத அளவு | கட்டுநிதி கிடைக்காத அளவு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| மீண்டெழும் | 47,300 | 45,665 | 1,635 | 3.46 |
| மூலதன | 3,908 | 2,796 | 1,112 | 28 |
| | --------- | -------- | ------- | |
| **மொத்தம்** | 51,208 | 48,461 | 2,747 | |
| | ===== | ===== | ==== | |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபையின் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.